ஓம் ஸ்ரீ சாயிராம்

பிரசாந்தி சந்தேஷ்
வினா விடை நேரம்

**வினா எண் 311**
**தலைப்பு சமுதாய பொது வெளியில் நன்னடத்தை**

நம் அன்புக்குரிய
பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 54-59லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி சமுதாய பொது வெளியில் நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் மேலும் அப்போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் என்ன என்பது பற்றி எங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமி யின் பதில்:
சமுதாயத்தில் சக மனிதர்களுடன் பழகும் போது நீங்கள் இரண்டு விஷயங்களை உடனடியாக மறந்து விட வேண்டும்.
ஒன்று நீங்கள் மற்றவருக்கு செய்கின்ற உதவிகள் மற்றும் நன்மைகள்.அது போல் மற்றவர் உங்களுக்கு செய்கின்ற தீமைகள்.இவற்றையெல்லாம் நீங்கள் மனதிலேயே வைத்திருக்காமல் உடனே மறந்து விட வேண்டும்.
மாறாக நீங்கள் வேறு இரண்டு விஷயங்களை மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.
அதாவது பிறர் உங்களுக்கு செய்த உதவிகளையும் நீங்கள் பிறருக்கு செய்து விட்ட தீமைகளையும் ஞாபகப்படுத்திகொண்டே இருக்க வேண்டும்.
அப்படி செய்து வந்தாலே உங்களிடம் அகந்தை பொறாமை வெறுப்பு கர்வம் போன்ற தீய குணங்கள் இல்லாமல் போய் விடும்.
இங்கே மற்றொரு முக்கிய மான விஷயத்தையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.உங்களிடம் காணப்படுகின்ற குறைகள்-அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதனை மிக பெரிய தாக நீங்கள் கருதி கொள்ள வேண்டும்.
ஆனால் மற்றவர்களிடம் பெருங்குறைகளை கண்டாலும் அவற்றை பெரிது படுத்தாமல் சாதரணமாக எடுத்து கொள்ள வேண்டும்.
அதேபோல் உங்களிடம் உள்ள நல்ல குணங்களை விளம்பரபடுத்தி கொள்ளாமலும் மற்றவர்களிடம் காணப்படுகின்ற நற்குணங்களை வரவேற்று கொண்டாடவும் வேண்டும்.
இது போன்ற நடத்தையை கை கொண்டால் அது உங்களிடம் உள்ள குறைகளை களையவும் நற் பண்புகளை மேம்படுத்தி கொள்ளவும் மற்றவர்களின்
தவறுகளை மன்னித்து மறக்கின்ற பக்குவத்தையும் உங்களுக்கு அளிக்கும்.

ஆனால் இன்றைய உலகமோ இதற்கு எதிர்மாறாகவே நடந்து கொள்கிறது.
ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள பெருமைகளை தம்பட்டமடித்து கொண்டும் தங்களிடமுள்ள பெருங்குறைகளைக மறைத்து கொண்டும் செல்கிறார்கள்.
மேலும் மற்றவர்களிடமுள்ள சிறு குறைகளையும் பெரிதுபடுத்தி கொண்டு அவர்களிடமுள்ள நல்ல குணங்களை சிறிதும் அங்கீகரிக்காமல் நடந்து கொள்கிறார்கள்.
இதுவே இன்றைய உலகில் காணப்படுகின்ற வெறுப்புணர்வு வேற்றுமைகள் மற்றும் போராட்டங்களுக்கான காரணமாகும்.
இது மட்டுமல்லாமல் இன்றைய உலகில் முற்றிலும் போலியான மனிதர்களும் இருக்கிறார்கள்.
இவர்கள் தங்களிடம் இல்லாத ஆளுமை பண்புகளை இருப்பதாக காட்டி கொண்டும் தங்களுடைய குறைகளை நிறைகளாக பொய்யாக சொல்லி நாடகமாடிக்கொண்டும் இருக்கிறார்கள்.
இவர்களையெல்லாம்விட கீழ்த்தரமான மனிதர்களும் இருக்கிறார்கள்.
இவர்கள் எப்போதும் மற்றவர்களி
டம் குற்றம் காண்பவர்களாக குறை சொல்பவர்களாக மற்றவர்களின் சிறு தவறுகளைககூட பூதாகாரமாக பெரிதுபடுத்துபவர்களாக இருக்கிறார்கள்.
இது மிகவும் தவறான ஒரு குணமாகும்.
உங்களிடமுள்ள குறைகளை கண்டறிந்து அவற்றை களைய முற்படுங்கள்.
மற்றவர்களிடம் உள்ள நல்லனவற்றை நீங்களும் கடைபிடியுங்கள்.

அடுத்த கேள்வி:ஸ்வாமி பொதுவாகவே மக்கள் தாங்கள் எப்போதும் நேரம் போதாமல் வேலைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் ஓய்வு எடுப்பதற்கூட நேரம் இல்லாமல் போவதாகவும் கூறிகொள்கிறார்கள்.அப்படியென்றால் மனிதர்கள் எப்போதுதான் ஓய்வெடுக்க முடியும்.

ஸ்வாமியின் பதில்:
ஓய்வு என்பதன் உண்மை அர்த்தம் என்ன தெரியுமா.செயல் ஒன்றும் புரியாமல் சும்மா உட்கார்ந்து விடுவது அல்ல.ஒரேயடியாக ஒரே மாதிரியான செயலையே செய்து கொண்டு இருக்காமல் வேறு ஒரு செயலை மாற்றி செய்து கொண்டாலே அதுவே ஓய்வாகும்.
சோம்பேறியாக இருந்தால் நீங்கள் துருப்பிடித்து தூசடைந்து உபயோகமில்லாமல் போய்விடுவீர்கள்.
சுறுசுறுப்பாக செயல்பட்ட வண்ணம் இருப்பதே மிகவும் நல்லது.
ஓய்வு என்பது ஒரு செயலிலிருந்து மற்றொரு செயலுக்கு மாறி கொள்வதேயாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஏதாவது ஒன்றை பற்றிய கவலை எங்களுக்கு எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது.எங்களால் கவலைபடாமல் இருக்க முடிவதேயில்லை.இதிலிருந்து விடு படுவது எவ்வாறு என்று எங்களுக்கு கூறுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமி யின் பதில்:
என்னை பொறுத்தவரை இந்த உலகத்தில் கவலை என்று ஒன்று கிடையவே கிடையாது.

இந்த உணர்வு மனம் சம்பந்தபட்ட ஒரு பிரமையே ஆகும்.
கவலை என்பது பயத்தினால் உங்களுக்கு நீங்களே உண்டாக்கி கொள்ளவது தானே தவிர வேறு எதுவும் இல்லை.
நீங்கள் கடந்த கால நிகழ்வுகளை எண்ணி கவலை கொள்கிறீர்கள்.
இது தேவையில்லாத ஒன்று.கடந்த காலம் என்பது முடிந்து போனது.இனி வரவே வராது.வருங்காலத்தை பற்றியும் நீங்கள் கவலை படுகிறீர்கள்.இதுவும் தேவையில்லாத ஒன்று.ஏனென்றால் வருங்காலம் நமக்காக என்ன வைத்திருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது.அது நிச்சயமில்லாதது.எல்லாமே நிகழ்காலத்தில்தான் அடங்கியுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.
நிகழ்காலம் என்பது கடந்த காலத்தின் விளைவு மற்றும் வருங்காலத்திற்கான அடிப்படையாகும்.
கடந்த காலத்தில் நீங்கள் விதைத்த விதைதான் இன்றைய விருக்ஷமாகும்.இந்த விருக்ஷத்திலுள்ள விதையே வருங்காலத்தின் ஆரம்பமாகும்.
ஆக எதைகுறித்தும் கவலை படுவது என்பது பயனற்ற செயலாகும்.
எப்போதும் எதற்காகவும் கவலை கொள்ள வேண்டாம்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி இன்றைக்கு படித்தவர்கள் பெரும்பாலோர் தங்கள் நேரம் பணம் சக்தி இவைகளை
நகரங்களின் கேளிக்கைகளில் வீணடிக்கிறார்கள்.
இதை பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பதை அறிந்து கொள்ள ஆவலுடன் இருக்கிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
காலமே கடவுள்.
காலாய நமஹ
காலகாலாய நமஹ
காலாதீதாய நமஹ என்றெல்லாம் போற்றுகிறீர்கள் அல்லவா.
காலமே தெய்வீகமாகும்.
நேரத்தை ஒரு போதும் வீணடிக்க கூடாது.
அப்படி செய்தால் அது பாவமாகும்.
நேரத்தை வீணாக்குவது என்பது வாழ்கையையே வீணாக்கிகொள்வதாகும்.
கடவுளே காலத்தின் அதிபதி ஆவார்.
அவசரகதியில் செயல்களை செய்யும் போது அது கால விரயத்தில் முடிகிறது.அதனால் கவலை உண்டாகிறது.
எனவே எதற்கும் பதட்டமோ அவசரமோ கொள்ள வேண்டாம்.
நல்ல காரியங்களை தேர்ந்தெடுத்து நிதானமுடன் செய்யுங்கள்.
இளமை பருவம் உங்கள் வாழ்க்கையில் மீண்டும் வர போவதில்லை.
எனவே காலத்தை பொன் போல போற்றி செயல்படுங்கள்.

நேரம் மட்டுமல்லாமல் பணமும் கூட மெத்த படித்தவர்களால் வீணடிக்கப்படுகிறது.இது நிச்சயமாக நல்லதல்ல.
பணத்தை வீணடிப்பது என்பது மிக தீய ஒரு செயலாகும்.
பணத்தை தவறான செயல்களுக்கு பயன்படுத்துவதும் கூடாது.
அதிக பணம் அதிக தவறுகளை செய்ய ஊக்குவிக்கும்.
உபரி வருமானத்தை நல்ல செயல்களுக்காக செலவிடுங்கள்.
சமுதாய சேவை பணிகளுக்காக செலவிடுங்கள். ஏனென்றால் நீங்கள் பிறந்து விட்ட இந்த சமுதாயத்திற்கு நீங்கள் நன்றி கடன் பட்டிருக்கிறீர்கள்.
அந்த கடனை திருப்பி செலுத்த வாவது சமுதாய சேவை பணிகளில் ஈடுபடுங்கள்.
ஏழைகளுக்கும் துன்பத்தில் இருப்பவர்களுக்கும் உதவி செய்ய உங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவிடுங்கள்.
தியாகத்தின் மூலம் தான் மோட்சத்தை பெற முடியும்.
எந்த புண்ணிய செயலுமோ எந்த செல்வமோ எந்த உடைமையுமோ தியாகத்திற்கு ஈடாகாது.
மனித உடலில் உதிரம் எப்போதும் எல்லா உறுப்புகளிலும் சுற்றி வர வேண்டும்.அப்படி இல்லை என்றால் உடலிலே கட்டி உண்டாகிவிடும்.அது போல பணம் ஒருவரிடத்திலேயே தங்கி விடாமல் சமுதாயத்திலே நலிவுற்றவர்களின் நலனுக்காக செலவிடப்பட வேண்டும்.
பணம் என்பதை உங்கள் காலணியை போல் கையாள வேண்டும்.
காலணி பெரிதாக இருந்தால் நடப்பது சிரமமாக இருக்கும்.சிறியதாக இருந்தால் காலை கடித்து புண் உண்டாகிவிடும்.
பணம் தேவைக்கு அதிகமாக வந்தால் அதனால் பல தீமைகளும் ஏற்படும்.எனவே தேவைக்கு அதிகமுள்ள பணத்தை நல்ல காரியங்களுக்கு தர்ம காரியங்களுக்கு செலவழியுங்கள்.
பணம் என்பது வந்து பின் போய்விடும்.
ஆனால் நீங்கள் கற்று கொள்கின்ற நன்னடத்தையும் நற்குணங்களும் உங்களை மேலும் மேம்படுத்தும்.

நன்னடத்தை என்பது பிரபஞ்ச சக்தியை வீணடிக்காமல் இருப்பதும் ஆகும்.
தண்ணீரை ஒரு போதும் வீணடிக்க கூடாது.
அன்னம் பிரம்மா
உயிர் வாழ்வதற்கு ஆதாரமான உணவும் கடவுளே.உங்கள் பசிக்கு உணவு எடுத்து கொள்வதில் தவறில்லை.அது இயற்கைதான்.
ஆனால் தேவைக்கு அதிகமாக பதார்த்தங்களை போட்டு கொண்டு அவற்றை உண்ணாமல் வெளியே வீசுவது கொடிய செயலாகும்.உண்பதற்கு முன்பாக உணவை இறைவனுக்கு படைத்துவிட்டு நீங்கள் ப்ரம்மார்பணம் பிரம்மஹவிஹி என்று பிரார்த்தனை செய்கிறீர்கள் அல்லவா.
இறைவா நீங்களே எங்கள் உடலில் வைஸ்வானரராக இருக்கின்றீர்கள்.
நாங்கள் உண்ணும் உணவை ஜெரிப்பதும் நீங்களே.அந்த உணவின் சாரத்தை எங்கள் உடலின் எல்லா உறுப்புகளுக்கும் எடுத்து சென்று சக்தி அளிப்பதும் நீங்களே.அதற்கு

நன்றி தெரிவிக்கும் விதமாக அந்த உணவை உங்கள் முன் சமர்பித்து வழி படுகின்றோம் இறைவா என பிரார்திக்கிறீர்கள்.
உணவை வீணடிப்பது கொடிய பாவமாகும் ஏனென்றால் இந்த உலகத்தில் எத்தனையோ பேர் தினமும் ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் பசியால் வாடுகிறார்கள்.

மேலும் நீங்கள் உங்களுடைய அளவு கடந்த ஆசைகளுக்கு ஓர் வரம்பு வைத்துகொள்ள வேண்டும்.இதன் மூலம் நீங்கள் உணவு,நேரம், பணம் மற்றும் பிரபஞ்ச சக்தி இவைகளை நான் ஒரு போதும் வீணடிக்க மாட்டேன் என்ற சங்கல்பத்தை எடுத்து கொள்ள வேண்டும்.மனித குலத்திற்கு இயற்கையின் கொடையான நிலம்,நீர், நெருப்பு,காற்று, ஆகாசம் இவை அனைத்தும் தெய்வீகமே.பஞ்ச பூதங்களான இயற்கை சக்திகளை வணங்கி போற்றுங்கள்.
அதனால் உங்களுக்கு நன்மையே நன்மையே உண்டாக்கும்.

நன்றி
நம் ஸ்வாமியின்
மேலும் பல தெய்வீக அறிவுறைகளை வர இருக்கின்ற வினா விடை பகுதியில் பார்ப்போம்.
ஜெய் சாயிராம்.